தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர் : 02 | இதழ் :200 | 4 - பக்கம் | 16.02.2025 | ஞாயிறுகிழமை | விலை ரூ,6




**சொல்லுக சொல்லிற் பயனுடைய**
**சொல்லற்கசொல்லிற் பயனிலாச் சொல்.**

விளக்கம்:

பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூற வேண்டும்.

## ஜம்மு காஷ்மீர் இனி மோதலின்றி நம்பிக்கையின் இடமாக இருக்கும் - ஜக்தீப் தன்கர்



ஸ்ரீநகர்: ஜம்மு காஷ்மீரில் ஜனநாயகம் வலுவடைந்துள்ளதால், இப்பகுதி இனி மோதலின் இடமாக இல்லாமல் நம்பிக்கையின் இடமாக இருக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் கத்ராவில் உள்ள ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி பல்கலைக்கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய ஜக்தீப் தன்கர், “இரண்டே ஆண்டுகளில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் ரூ.65,000 கோடி மதிப்பிலான முதலீட்டு முன்மொழிவுகளைப் பெற்றுள்ளது. இப்பகுதி நம்பிக்கை, மூலதனம் ஆகியவற்றின் சங்கமமாக உள்ளது. அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு ஒரு தற்காலிக ஏற்பாடு. அதை உருவாக்க டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் மறுத்துவிட்டார். 2019-ம் ஆண்டில், இந்த புனித நிலத்தில் ஒரு புதிய பயணம் தொடங்கியது. தனிமைப்படுத்தலில் இருந்து ஒருங்கிணைப்பை நோக்கிய பயணம் அது.

2023-ம் ஆண்டில், 2 கோடிக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் ஜம்மு-காஷ்மீருக்கு வருகை தந்துள்ளனர். இது உள்ளூர் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது. மாற்றத்தின் காற்று அமைதியையும் முன்னேற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. 2024 மக்களவைத் தேர்தலில் 35 ஆண்டுகளில் இல்லாத அதிக வாக்குப்பதிவு நடந்துள்ளதன் மூலம் ஜம்மு காஷ்மீரில் ஜனநாயகம் வலுவடைந்துள்ளது. இப்பகுதி இனி மோதலின் இடமாக இல்லாமல் நம்பிக்கையின் இடமாக இருக்கும்” என்று தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச முதல்வர் உமர் அப்துல்லா, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச கல்வி அமைச்சர் சகீனா மசூத் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த காவலர், ஆசிரியர் உட்பட 3 அரசு ஊழியர்கள் பணி நீக்கம்



ஜம்மு: காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த காவலர், ஆசிரியர் உட்பட 3 அரசு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரின் எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில், சமீப காலமாக தீவிரவாத தாக்குதல் சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளன. இந்நிலையில், ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா தலைமையில் பாதுகாப்பு தொடர்பான மறுஆய்வு கூட்டம் கடந்த 13-ம் தேதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தீவிரவாதத்தை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு சின்ஹா உத்தரவிட்டார். மேலும், தீவிரவாதிகளின் கட்டமைப்பை முற்றிலும் ஒழிக்க வேண்டும் எனவும் தீவிரவாதிகளுக்கு நிதி மற்றும் போக்குவரத்து உதவி செய்வதைத் தடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

சமூகத்தில் அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் தனி நபர்கள் மற்றும் குழுக்களை தீவிரவாத செயலாக கருதி, சட்டப்படி அவர்களுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்ட காவலர் பிர்டஸ் அகமது பட், மாவட்ட சிறையில் உள்ள ஆசிரியர் முகமது அஷ்ரப் பட், வனத்துறை அலுவலகத்தில் ஆர்டர்லியாக பணிபுரியும் நிசார் அகமது கான் ஆகிய 3 அரசு ஊழியர்கள் நேற்று பணநீக்கம் செய்யப்பட்டனர்.

இதில் பிர்டஸ் மற்றும் அஷ்ரப் பட் ஆகிய இருவரும் லஸ்கர்-இ-தொய்பா அமைப்பின் சார்பில் பணியாற்றியதாகவும் நிசார் அகமது ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்புக்கு உதவியதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

## மகா கும்பமேளாவில் இதுவரை 50 கோடி பக்தர்கள் புனித நீராடினர்: உத்தர பிரதேச அரசு தகவல்

பிரயாக்ராஜ்: உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இதுவரை 50 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடியுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமத்தின் கரைகளில் மகா கும்பமேளா கடந்த ஜனவரி 13-ம் தேதி தொடங்கியது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த பிரம்மாண்ட விழா பிப்ரவரி 26 வரை நடைபெற உள்ளது. கும்பமேளாவில் திரிவேணி சங்கமத்தில் நீராடுவது புனிதமானதாக இந்துக்களால் கருதப்படுகிறது. இதனால் தினமும் லட்சக்கணக்கான பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். கடந்த ஜனவரி 29-ம் தேதி உயிரிழப்பை ஏற்படுத்திய துரதிருஷ்ட நெரிசல் சம்பவம் நிகழ்ந்த போதிலும் பக்தர்கள் வருகை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் பிப்ரவரி 14-ம் தேதி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 6 வரை திரிவேணி சங்கமத்தில் 92 லட்சத்துக்கும் மேற்பட்டோர் புனித நீராடியதாகவும் இதன்மூலம் இங்கு இதுவரை புனித நீராடி மொத்த பக்தர்களின் எண்ணிக்கை 50 கோடியை கடந்துள்ளதாகவும் உ.பி. அரசு கூறியுள்ளது.

இதுகுறித்து உ.பி. அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், “அமெரிக்கா, ரஷ்யா, இந்தோனேசியா, பிரேசில், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளின் மக்கள் தொகையை விட சனாதன தர்மத்தின் புனித நீரில் மூழ்கி எழுந்தவர்கள் அதிகம்.

உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் 10 நாடுகள் பட்டியலில் சீனா, இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா, பாகிஸ்தான், நைஜீரியா, பிரேசில், வங்கதேசம், ரஷ்யா மெக்சிகோ ஆகியவை உள்ளன.

இவற்றில் சீனா மற்றும் இந்தியா மட்டுமே மகா கும்பமேளா பக்தர்களை விட அதிக மக்கள் தொகை கொண்டவை. மனித குல வரலாற்றில் எந்தவொரு மத, கலாச்சார அல்லது சமூக நிழ்ச்சியில் இவ்வளவு மக்கள் கலந்து கொண்டதில்லை” என்று கூறியுள்ளது.

# மத்திய அரசு மேல்தட்டு மக்களுக்கானது... எப்படி? தரவுகளுடன் காரணங்களை அடுக்கிய ப.சிதம்பரம்



திருநெல்வேலி: மத்திய அரசு மேல்தட்டு மக்களுக்கானது; ஏழை, எளிய மக்களுக்கானது அல்ல என்று முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் மாநகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் பாளையங்கோட்டையில் காந்தி, நேரு, அம்பேத்கர், அரசியலமைப்புச் சட்டம் என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ப. சிதம்பரம் பேசியதாவது: அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சாசனத்தை பாஜக ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியல் சாசனம் மனுதர்மம் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று பாஜக செயல்படுகிறது. அக்கட்சி மேல்தட்டு மக்களுக்கான கட்சி, சாதி ஆதிக்கத்தை ஆதரிக்கும் கட்சி. கடந்த 11 ஆண்டுகால பாஜக ஆட்சியில் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்ஜெட், பாஜகவின் வேஷத்தை கலைத்துவிட்டது. ரூ.1 லட்சம் கோடியை மக்களுக்கு தரப்போகிறோம் என்று தெரிவித்துவிட்டு மேல்தட்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். மொத்தமுள்ள 143 கோடி மக்கள் தொகையில் வருமான வரி செலுத்தும் 3.20 கோடி பேருக்கு ரூ.1 லட்சம் கோடியை வழங்கியிருக்கிறார்கள்.

வருமான வரி செலுத்தாதவர்கள், ஏழை, எளியவர்கள் மத்திய அரசுக்கு மக்களாக தெரியவில்லையா. மன்மோகன் சிங் தலைமையில் இருந்த 10 ஆண்டுகால மத்திய ஆட்சியின்போது 6.8 சதவிகிதம் வளர்ச்சி இருந்தது. இப்போது 5.9 சதவிகிதம் வளர்ச்சிதான் உள்ளது. ஒருதரப்பு மக்களுக்கே செல்வம் சேர்கிறது. நாட்டில் யாரும் பட்டினியால் சாகவில்லை ஆனால் பசி இருக்கிறது. பல குடும்பங்கள் 2 வேளைதான் உணவு உண்ண முடிகிறது. இந்த ஏழை எளிய மக்களுக்காக 100 நாள் வேலை திட்டத்தை கொண்டு வந்தோம். ஆனால் அதை மோடி ஒழிக்க நினைக்கிறார். கடந்த 2022-2023-ம் ஆண்டிலிருந்து தற்போதுவரை ஆண்டுக்கு ரூ.86 ஆயிரம் கோடியை மட்டுமே இத் திட்டத்துக்கு ஒதுக்குகிறார்கள். இந்த ஆண்டு 44 நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இந்த திட்டத்தை ஒழிப்பதே பாஜகவின் நோக்கம். நாட்டில் 2.27 லட்சம் பேரின் ஆண்டு வருமானம் ரூ.1 கோடி, 262 பேரின் ஆண்டு வருமானம் ரூ.100 கோடி, 23 பேரின் வருமானம் ரூ.500 கோடி. இவர்களுக்கு பட்ஜெட்டில் வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. 500 கோடி வருமானம் ஈட்டுவோருக்கு வரிச்சலுகை அளிக்க வேண்டுமா. இதைத்தான் பாராளுமன்றத்தில் கேட்டோம்.

ஆனால் இதை மத்திய நிதியமைச்சர் நியாயப்படுத்தி பேசுகிறார். ஏழை, எளிய மக்களை குறித்து மத்திய பட்ஜெட்டில் ஒரு வார்த்தைகூட இல்லை. விலைவாசி உயர்வு காரணமாக அடித்தட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திய குடும்பங்களின் கடன் சுமை அதிகரித்துள்ளதாக உலக வங்கி தெரிவித்திருக்கிறது. ஆனால் இதை நிர்மலா சீதாராமன் ஒத்துக்கொள்ளவில்லை. நாட்டில் 25 சதவிகிதம்பேர் மிகமிக வறியவர்கள். இவர்களை குறித்து பிரதமருக்கும், நிதியமைச்சருக்கும் தெரியவில்லை. வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருவது குறித்தும் இவர்களுக்கு தெரியவில்லை. வேலைவாய்ப்புக்கான திட்டங்களுக்காக மத்திய அரசு ஒதுக்கிய ரூ.28318 கோடியில், ரூ.20 ஆயிரம் கோடியை மட்டுமே செலவழித்துள்ளனர். இதுபோல் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை செலவிடவில்லை. மத்திய அரசின் தற்போதைய பட்ஜெட், தில்லி, பிகார் மக்களுக்கான பட்ஜெட். அதில் தில்லியில் வெற்றி பெற்றுள்ளனர். பிகாரில் வெற்றிபெறுவோம் என்று நம்பியிருக்கிறார்கள். 2022-2023-ல் பெருமுதலாளிகளுக்கு 2.08 கோடியை தள்ளுபடி செய்த மத்திய அரசு, சாதாரண மாணவர்களின் கல்வி கடனை ரத்து செய்ய மறுக்கிறது. மத்திய அரசு மேல்தட்டு மக்களுக்கான அரசு, பணக்காரர்களுக்கான அரசு.

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து இதை நாம் எதிர்க்கிறோம். மாநில அரசின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். மீண்டும் நமது அரசு மத்தியில் அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப் பெருந்தகை தலைமை வகித்து பேசியதாவது: நமக்கு தரவேண்டிய நிதியை மத்திய அரசு தரமறுக்கிறது. தமிழ்நாட்டை மத்திய அரசு பழிவாங்குகிறது. வடமாநிலங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தமிழகத்தில் இண்டியா கூட்டணியை பிரிக்க முடியாது. தமிழகத்தில் இண்டியா கூட்டணி எஃகு கூட்டணி. அதில் குழப்பங்களை விளைவிக்க முயல்கிறார்கள். தமிழகத்தின் வளர்ச்சிக்கான கூட்டணியில் இருக்கிறோம். 2026 தேர்தலிலும் தமிழகத்தில் திமுக தலைமையிலான இண்டியா கூட்டணி பெருவாரியாக வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் மாநில காங்கிரஸ் தலைவர் கே.வி. தங்கபாலு, காங்கிரஸ் சட்டப்பேரவை குழு தலைவர் ராஜேஷ் குமார், ராபர்ட் புரூஸ் எம்.பி., ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., முன்னாள் மத்திய இணையமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன், முன்னாள் எம்பிக்கள் பீட்டர் அல்போன்ஸ், ராமசுப்பு, திருநெல்வேலி மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சங்கரபாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ராஜேஷ் முருகன் நன்றி கூறினார்.

## நீலகிரி மாவட்டம் குன்னூரில் உணவு கட்டுப்பாட்டு துறையினர் ஆய்வு மேற்கொண்டதில் பிரபல உணவகத்திற்கு சீல் வைத்து நோட்டீஸ் வழங்கப்பட்டது.



நீலகிரி மாவட்டம் குன்னூரில் உணவு கட்டுப்பாட்டுறையினர் தேனீர் கடைகள்,மீன் கடைகள், போன்றவற்றை ஆய்வு மேக்கொண்டனர் அப்போது கலப்பட டீ தூள்பயன்படுத்தப்படுகிறதா மீன் கடைகளில் பழைய மீன்கள் விற்கப்படுகிறதா என்றும் ஆய்வு மேற்கொண்டனர். மேலும் குன்னூரில் இயங்கி பிரபல தனியார் உணவகமான ஹைதராபாத் பிரியாணிகடையில் ஆய்வு மேற்கொண்டதில் பழைய கெட்டுப்போன இறைச்சிகள் மற்றும் சுகாதாரமற்ற நிலையில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர் பின்பு உணவகத்திற்கு பயன்படுத்தப்படும் தண்ணீர் தொட்டியை பார்வையிட்டதில் அப்பகுதி சுகாதாரமற்ற நிலையில் குப்பைகளும் சிறுநீர் கழிக்கும் பகுதியாகவும் காணப்பட்டதால் உணவு கட்டுப்பாட்டு துறை மாவட்ட அதிகாரி சுரேஷ் மற்றும் நந்தகுமார் அடங்கிய குழுவினர் ஹைதராபாத் உணவகத்திற்கு சீல் வைத்து நோட்டீஸ் வழங்கப்பட்டு 15 நாட்களுக்குள் ஹோட்டல் முழுவதும் சீரமைக்கப்பட்ட பின் திறக்க வேண்டுமென எச்சரிக்கை விடுத்தனர். சுகாதாரமற்ற தண்ணீர் தொட்டியை சீரமைத்த பின் உணவகத்தை திறக்க வேண்டும் என்று கூறினர் அப்போது உணவகத்தில் உணவருந்திக் கொண்டிருந்தவர்கள் பின்பக்க வழியாக வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டது.

## பாழாகும் நீலகிரியின் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுமா



நீலகிரி மாவட்டம் மஞ்சூர்பெல்லட்டி வில்லேஜ் பகுதியில் பரு பதி ஆர்கானிக் பார்ம் என்னும் நிறுவனம் ஆந்திர மாநிலம் குண்டலா வினோத் என்பவர் நடத்தி வருவதாகவும் அந்த இடத்தில் சட்டத்திற்கு புறம்பாக மாஸ்டர் பிளான் விதிகளை மீறி ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த வசதி படைத்தவர்கள் சொகுசு விடுதி கட்டியுள்ளதாகவும் இந்த சொகுசு விடுதியை சுற்றிலும் மின் வேலிகள் அமைந்துள்ளதால் வனவிலங்குகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் வனவிலங்குகளின் வழித்தடத்தை மூடி மின் வேலிகள் அமைத்துள்ளதாகவும் அரசின் சட்ட திட்டங்களுக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள இந்த கட்டிடத்தை பூட்டி சீல் வைத்திடவேண்டும் என்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக சம்பந்தப்பட்ட விடுதியை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் வேண்டுகோள் வைத்துள்ளனர்.

# கும்மிடிப்பூண்டி அருகே ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற பொதுமக்கள் எதிர்ப்பு

கும்மிடிப்பூண்டி, பிப்.16

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே உள்ள மேல்பாக்கம் கிராமத்தில் வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து 66 வீடுகள் கட்டப்பட்டு இருந்தன. இதனை அகற்றக்கோரி தனிநபர்கள்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது.



இந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின்படி வீடுகளை அகற்ற வருவாய்த் துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்களை அப்பகுதி பொதுமக்கள் தடுத்து எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர்.

அப்போது தங்களுக்கே நிலத்தை சொந்தமாக்க வேண்டும் என்று மேல்பாக்கம் கிராமமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டம் குறித்து தகவலறிந்து சென்ற கும்மிடிப்பூண்டி தாசில்தார் கிராம மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையை தொடர்ந்து போராட்டம் நடத்திய மக்களை போலீசார் குண்டுகட்டாக கைது செய்தனர்.

மேலும் போலீஸ் பாதுகாப்புடன் பொக்லைன் எந்திரங்கள் மூலம் வீடுகள் இடிக்கும் பணியில் வருவாய்த்துறையினர் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# திருப்பத்தூர் மாவட்ட பதிவாளர் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை

திருப்பத்தூர் பிப்.16

மதுரவாயல் அடுத்த நூம்பல் பகுதியில் செந்தூர பாண்டியன் பதிவாளர் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் அவர் முத்திரை கட்டணத்தை குறைவாக வசூலித்து ரூ. 1.34 கோடி அரசுக்கு

இழப்பு ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறையினர்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் செந்தூர் பாண்டியன் மற்றும் அவரது மனைவி வீட்டில் இல்லாத நிலையில், அங்கு வந்த லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள்

அவரது உறவினர்கள் முன்னிலையில் வீடு முழுவதும் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். இதையடுத்து 4 மணி நேரத்திற்கும் மேலாக இந்த சோதனை நடைபெற்று வருவதால் பரபரப்பான சூழ்நிலை நிழவி வருகிறது.

# துரோகம் செய்தது யார்? செங்கோட்டையன் விளக்கம்

ஈரோடு, பிப்.16

அதிமுகவின் மூத்த தலைவரும், எம்.ஜி. ஆருக்கு நெருக்கமாக இருந்தவருமான செங்கோட்டையன் பேச்சும், செயல்பாடுகளும் தான் கடந்த சில நாட்களாக அதிமுகவில் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன



ஈரோடு மாவட்டம் கோபியில் முன்னாள் முதல்அமைச்சர் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கலந்து கொண்டார். பொதுவாக இது போன்ற விழாக்களில் எம்ஜிஆர், ஜெயலலிதா படங்களுடன் எடப்பாடி பழனிசாமி படம் சிறியதாகவும் அதை விட சிறியதாக செங்கோட்டையன் படம் இருக்கும். ஆனால் இந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமியின் படம் இருக்கும் அதே சைசில் செங்கோட்டையனின் படம் இருந்தது கவனிக்கத்தக்கதாக இருந்தது.

இந்தநிலையில், இந்த கூட்டத்தில் செங்கோட்டையன் பேசுகையில், திமுக ஆட்சியில் பல்வேறு சோதனைகளை மக்கள் சந்தித்து வருகிறார்கள். எனவே தொண்டர்களோடு தொண்டராக இருந்து நான் பணியாற்றி மீண்டும் தமிழகத்தில் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆட்சியை உருவாக்குவோம். சில துரோகிகளால் நாம் தேர்தலில் தோற்றோம். அவர்களை அடையாளம் காணப்பட வேண்டியவர்கள் என பரபரப்பாக பேசியிருந்தார் இது கட்சியினரிடையே விவாதத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில், கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன் கூறியதாவது:

அந்தியூர் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கு துரோகம்தான் காரணம் என கூறினேன். துரோகம் செய்தார்கள் என பேசியது

அந்தியூர் தொகுதிக்கு மட்டுமே பொருந்தும். ஆர்.பி. உதயகுமார் என்னை பற்றி பேசவில்லை. நான் செங்கோட்டையனை விமர்சிக்கவில்லை என ஆர்.பி. உதயகுமாரே கூறி விட்டாரே. கூட்டத்தில் பேசும் போது கட்சியின் பொதுச்செயலாளர் என தெளிவாககுறிப்பிட்டேன் என்றார்.

# காங்கிரஸ் கட்சிதான் தி.மு.க.வின் ஏ டீம் தமிழிசை விமர்சனம்

வேலூர் பிப்.16

வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரை சந்தித்து நலம் விசாரிப்பதற்காக குமரி அனந்தன் மகளும், பா.ஜ.க. முன்னாள் தலைவருமான தமிழிசை சவுந்தரராஜன் வருகை தந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழக காங்கிரஸ் தலைவர் எதற்கெடுத்தாலும் பா.ஜ.க.வை குற்றம்சாட்டுகிறார். யார் வீட்டிலாவது சமையல் செய்யமுடியவில்லை என்றால்கூட பா.ஜ.க.வின் சதியாக இருக்குமோ என்று சொல்லக்கூடிய அளவிற்கு சென்றுவிட்டார்.

அவர் திருப்பரங்குன்றத்திற்கு செல்ல முற்ப ட்டதாகவும், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டாம் என்று கூறியதால் செல்லவில்லை என்றும் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார். எங்களைப் பார்த்து 'பி' டீம், 'சி' டீம் என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். ஆனால்காங்கிரஸ் கட்சிதான் தி.மு.க.வின் 'ஏ' டீம்." இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

# பள்ளி கல்வித்துறையில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டம்

சென்னை, பிப்.16

பள்ளி கல்வித்துறையில் 14 ஆண்டுகளாக பணியாற்றி வரும் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் 6,500 பேருக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பது உள்பட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பள்ளி கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கம் சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாநில தலைவர் த.ல.சீனிவாசன் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர்சு.ஹரிபாஸ்கர், பொருளாளர் மா.அருண்குமார் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

# பாம்பன் புதிய ரெயில் பாலம் 28ந்தேதி திறப்பு.?

ராமேசுவரம், பிப்.16

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தையும், ராமேசுவரத்தையும் இணைக்கும் வகையில் பாம்பன் கடலில் ரூ.550 கோடியில் புதிய ரெயில் பாலம் கட்டப்பட்டு உள்ளது. இந்த பாலத்தின் உறுதி தன்மை குறித்து தொடர் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் நடத்திய ஆய்வின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டன. தொடர்ந்து

இரும்பால் ஆன இணைப்பு பகுதியை செங்குத்தாக மேலே தூக்கி இறக்கி கப்பல்கள், ரெயில்களை இயக்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.



தற்போது பாலத்தில் இறுதிகட்ட ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய ரெயில் பாலத்தை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என பொது மக்கள்கோரிக்கைவைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், புதிய ரெயில் பாலத்தை ஆய்வு செய்வதற்காக தெற்கு ரெயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் மற்றும் அதிகாரிகள் இன்று காலை மண்டபம் வந்தனர். அங்கிருந்து புதிய ரெயில் பாலத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்டனர். அப்போது பாலத்தின் உறுதித்தன்மை, தூக்கு பாலத்தின் தரம் உள்ளிட்டவைகளை இறுதி கட்டமாக ஆய்வு செய்தனர். தொடர்ந்து ராமேசுவரம் ரெயில் நிலையத்திலும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

இதற்கிடையே பாம்பன் புதிய ரெயில் பாலத்தை திறந்து வைப்பதற்காக பிரதமர் மோடி வருகிற 28 ந்தேதி தமிழகம் வர உள்ளதாகதகவல்கள்வெளியாகி உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பிரதமர் அலுவலகம் மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. திறப்பு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ள நிலையில், மண்டபம் மற்றும் பாம்பனில் அதற்கான ஏற்பாடுகளை ரெயில்வே அதிகாரிகள் செய்து வருகிறார்கள்.

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வலியுறுத்தி தொடர் முழக்கப் போராட்டம்: அன்புமணி தகவல்



சென்னை, பிப்.16

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் சமூகநீதியை வலுப்படுத்துவதற்காக சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுவடைந்து வரும் நிலையில், அதற்கான எந்த முயற்சியையும் தமிழக அரசு மேற்கொள்வதாக தெரியவில்லை. 69% இட ஒதுக்கீட்டை பாதுகாக்கும் விஷயத்தில் அக்கறையின்றி, சமூகநீதிக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

ஒரு நாடோ, ஒரு மாநிலமோ வளர வேண்டும் என்றால் அதன் அங்கமாக இருக்கும் அனைத்து சமுதாயங்களும் வளர வேண்டும். ஒரு சமுதாயம் பின் தங்கி இருந்தால் கூட ஒட்டுமொத்த மாநிலத்தின் அல்லது நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படும்.அப்படிஒருநிலைமை ஏற்படாமல் தடுக்க வேண்டுமானால் அனைவருக்கும் சமமான வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டும். அதற்கு ஒவ்வொரு சமூகமும் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்பில் எந்த நிலையில் உள்ளன என்பதை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற வகையில் திட்டம் வகுக்க வேண்டியது அவசியம் ஆகும். அத்தகைய திட்டத்தை வகுப்பதற்கு தேவையான தரவுகளை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலமாக மட்டும் தான் திரட்ட முடியும். அதனால் தான் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக பாமக நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்.

அதேபோல், சமூகநீதியையும், சம நீதியையும் நிலை நிறுத்துவதற்கும், சமூகநீதியை பாதுகாப்பதற்கும் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு மிகவும் அவசியமாகும். குறிப்பாக, தமிழ்நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் 69% இட ஒதுக்கீட்டை பாதுகாக்க வேண்டும் என்றால், அதற்கு தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தியே தீர வேண்டும். ஆனால், பல ஆண்டுகளாக வலியுறுத்தியும் தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த திமுக அரசு மறுக்கிறது.

அண்டை மாநிலமான தெலுங்கானா சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தி முடித்தது மட்டுமின்றி, அதனடிப்படையில் அம்மாநிலத்தின் இடஒதுக்கீட்டின்அளவை இப்போதுள்ள 50 விழுக்காட்டில் இருந்து 66 விழுக்காடாக உயர்த்த முடிவு செய்து அதற்கான சட்டத் திருத்த முன்வரைவை அடுத்த மாதம் முதல் வாரத்தில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்து நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறது. ஆனால், இதை எதையுமே உணராத தமிழ்நாடு அரசு சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்ற பழைய பல்லவியையே மீண்டும், மீண்டும் பாடிக் கொண்டிருக்கிறது.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தும் விஷயத்தில் தமிழக அரசின் துரோகத்தை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இந்த விவகாரத்தில் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பதற்காக கடந்த பத்தாம் தேதி சென்னையில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில், ''சமூகநீதியைக் காப்பதற்கான கடமையை தமிழக அரசு செய்யத் தவறிய நிலையில், அதை சுட்டிக்காட்டி கடமையைசெய்யவைக்க வேண்டியது சமூகநீதி அமைப்புகளின்பொறுப்பு ஆகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை விரைந்து நடத்த வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்தி, சமூக நீதியில் அக்கறைக் கொண்ட அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து, அவற்றின் சார்பில் சென்னை மாநகரில் மாபெரும் போராட்டத்தை நடத்த பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்தாய்வுக் கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் சமூகநீதி கூட்டமைப்புக் கட்சிகள் இணைந்து வரும் 20ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் தொடர் முழக்கப் போராட்டத்தை நடத்தவிருக்கின்றன.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான எனது தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில், பா.ம.க. கவுரவத் தலைவர் ஜி.கே,மணி, முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி, தமிழ்மாநில காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான ஜி.கே. வாசன், அம்மா மக்கள் முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஜி.செந்தமிழன், புரட்சி பாரதம் கட்சித் தலைவர் பூவை ஜெகன் மூர்த்தி, இந்திய ஜனநாயகக் கட்சியின் தலைவர் இரவி பச்சமுத்து, புதிய நீதிக் கட்சியின் பொதுச்செயலாளர் டாக்டர் கோ.சமரசம், தென்னிந்திய பார்வர்டு தலைவர் திருமாறன்ஜி, கொங்கு மக்கள் முன்னணியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் கவுண்டர், தமிழர் தேசம் கட்சித் தலைவர் கே.கே.எஸ் செல்வக்குமார், தமிழக மக்கள் முன்னேற்றக் கழக இணைப் பொதுச்செயலாளர் தமிழரசன், தமிழ்நாடு யாதவ மகாசபை செயலாளர் வழக்கறிஞர் சேது மாதவன், வெள்ளாளர் முன்னேற்றக்கழகத் தலைவர் அண்ணா சரவணம், தமிழ்நாடு நாடார் சங்கத் தலைவர் முத்து ரமேஷ் , வழக்கறிஞர்சமூகநீதிப்பேரவைத் தலைவர் வழக்கறிஞர் பாலு உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். இவர்கள் தவிர சமூகநீதியில் அக்கறை கொண்ட மேலும் பல அமைப்புகளின் நிர்வாகிகளும் இத்தொடர் முழக்கப் போராட்டத்தில் கலந்து கொள்வர் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# சென்னை: அடுக்குமாடி குடியிருப்பின் இரும்பு கேட் சரிந்து விழுந்ததில் சிறுமி உயிரிழப்பு

சென்னை, பிப்.16

சென்னையில் அடுக்குமாடி குடியிருப்பின் இரும்பு கேட் சரிந்து விழுந்ததில் சிறுமி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை நங்கநல்லூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசிப்பவர் சம்பத். இவரது மகள் ஐஸ்வர்யா. நேற்று சம்பத், பள்ளி முடிந்ததும் தனது மகள் ஐஸ்வர்யாவை பைக்கில் அழைத்து வந்துள்ளார். வீடு திரும்பியதும், அடுக்குமாடி குடியிருப்பின் கேட்டை சிறுமி ஐஸ்வர்யா மூடியுள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக இரும்பு கேட் சிறுமி மீது சரிந்து விழுந்தது. உடனடியாக அருகில் இருந்தவர்கள் கேட்டை தூக்கி சிறுமியை மீட்டனர். இதில் படுகாயமடைந்த சிறுமி ஐஸ்வர்யா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், அங்கு அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர் தெரிவித்தார்.




# பெற்றோரைக் கொண்டாடுவோம் என்ற பெயரில் பெற்றோரை அலைக்கழிப்பதா?: ராமதாஸ் கண்டனம்

சென்னை, பிப்.16

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தை அடுத்த திருப்பெயர் கிராமத்தில் தனியார் பள்ளி ஒன்றில் பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறவிருக்கும் பெற்றோரைக் கொண்டாடுவோம் என்ற பெயரிலான மாநாட்டுக்காக கடலூர், அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோர்களை அழைத்து வர வேண்டும் என்று அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அரசு அதன் விளம்பரத்திற்காக பெற்றோரையும், ஆசிரியர்களையும் அலைக்கழிப்பது கண்டிக்கத்தக்கது.

அரசு பள்ளி மாணவர்களுக்கான திட்டங்கள் குறித்து பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகக் கூறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சிக்கு 7 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு அரசு பள்ளியில் இருந்தும் குறைந்தது 50 பெற்றோர்களைஅழைத்துவரவேண்டும்; அனைத்து ஆசிரியர்களையும் அழைத்து வர வேண்டும் என்று தலைமை ஆசிரியருக்கு மாவட்ட கல்வி அதிகாரிகள் ஆணையிட்டுள்ளனர். அதேபோல், தனியார் பள்ளிகளில் இருந்து குறைந்தது 20 பெற்றோரை அழைத்து வர வேண்டும் என்றும் வாய்மொழியாக ஆணையிடப்பட்டுள்ளது.

பெற்றோரை விருத்தாசலத்திற்கு அழைத்து வருவதற்காக தனியார் பள்ளிகள் அவற்றிடம் உள்ள பேருந்துகளை இலவசமாக அனுப்பி வைக்க வேண்டும்; விழா செலவுக்கு நன்கொடை வழங்க வேண்டும்; பெரிய பள்ளிகள்மற்றும்தனியார்பள்ளிகள் சங்கத்தின் சார்பில் நாளிதழ்களில் விளம்பரங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கடந்த ஆண்டு காஞ்சிபுரம் மண்டலத்தில் நடந்த பெற்றோரைக் கொண்டாடுவோம் நிகழ்ச்சி தோல்வி அடைந்து விட்டதாலும், இதுதான்கடைசி மண்டல பெற்றோரைக் கொண்டாடுவோம் மாநாடு என்பதாலும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோரை அழைத்து வர வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவதாக ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பெற்றோரைக் கொண்டாடுவோம் என்ற பெயரில் மாநாடு நடத்த வேண்டும் என்று எந்த பெற்றோரும் கோரிக்கை விடுக்கவில்லை. பெற்றோர்களை சந்திக்க வேண்டும் என்று முதல்அமைச்சரோ, அமைச்சர்களோ நினைத்தால் பள்ளிகள் தோறும் சென்று பெற்றோரை சந்திக்கலாம். அதை விடுத்து 7 மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோரை விருத்தாசலத்திற்கு அழைத்து வருவது மனித உரிமை மீறல் ஆகும். மாநாடு நடைபெறும் இடத்திற்கும், திருவண்ணாமலை மாவட்டத்தின் வடகோடி எல்லைக்கும் இடையிலான தொலைவு 170 கி.மீ ஆகும். மாநாடு காலை 8.30 மணிக்கு தொடங்கும் என்றும், பெற்றோர்கள் காலை 7 மணிக்குள் வந்து விட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. காலை 7 மணிக்கு விருத்தாசலம் செல்ல வேண்டும் என்றால் குறைந்தது அதிகாலை 3.00 மணிக்கு பெற்றோர்கள் புறப்பட வேண்டும். இந்தக் கொடுமைகளையெல்லாம் பெற்றோர் விரும்பாத நிலையில் அவர்களை கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்வது நியாயமல்ல.

பெற்றோரைக் கொண்டாடுவோம் என்ற தலைப்பில் மாநாடு நடத்துவதன் பின்னணியில் புனிதமான நோக்கங்கள் எதுவும் இல்லை. விரைவில் தேர்தல் வரவிருக்கும் நிலையில் பரப்புரைக்கான வாய்ப்பாகவே இந்த மாநாட்டை ஆளும் திமுக பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. அதற்காக ஆசிரியர்களையும், பெற்றோரையும் அலைக்கழிப்பது சரியல்ல. எனவே, விருத்தாசலத்தில் வரும் 22ம் தேதி நடத்தப்படவுள்ள பெற்றோரைக் கொண்டாடுவோம் மாநாட்டை ரத்து செய்ய வேண்டும். அதற்கு பதிலாக வட்ட அளவில் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொள்ள அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரிகளுக்கு நுண்ணறிவு பயிற்சி: அரசு சான்றிதழும் வழங்கப்படும்



சென்னை, பிப்.16

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:tamil

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்துபவர்களுக்கான ஒரு புதிய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி அணுகுமுறை. தரவு உந்துதல் & உண்மையானநுண்ணறிவு பயிற்சி வரும் 22ம் தேதி நடைபெற உள்ளது.

பயிற்சில் இடம் பெறும் தலைப்புகள் முக்கிய எடுத்துக்காட்டுகள், தரவு சந்தைப்படுத்துதலை வளர்ச்சிஉந்துதலாகஅதன் திறனை அடைய உதவுகிறது, சந்தைப்படுத்தல் செயல்பாடு தரவு உந்துதல் குறைவாக உள்ளது, தரவு உந்துதல் சந்தைப்படுத்துபவர்கள் வித்தியாசமாக என்ன செய்கிறார்கள் மற்றும் தரவு நிறைந்த அணுகுமுறையின் நன்மைகள், CMO கள் தரவு மற்றும் நுண்ணறிவுகளை எவ்வாறு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும், முடிவுரை தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்துபவர்களுக்கான ஒரு புதிய அறிவியல் / ஆராய்ச்சி அணுகுமுறை செய்ய விரும்பும் மாணவர்கள், பட்டதாரிகள், பொறியாளர்கள், சந்தைப்படுத்துபவர்கள், ஆலோசகர்கள், தொழில்முனைவோர், மேலாளர்கள், நிர்வாகிகள், தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரிகள் 215 ஆண்டுகள் வணிக சந்தைப்படுத்தல் நிபுணத்துவம் பெற்றவர்கள் அனைவரும் சேரலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது: 90806 09808/ 98416 93060/ 9677152265. அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம். www.editn.in என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தி.மு.க. ஆட்சியில் அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரிப்பு: அண்ணாமலை குற்றச்சாட்டு



சென்னை, பிப்.16

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மருத்துவர் இல்லாத நிலையில், அங்கிருந்த உதவியாளர் ஒருவர் ஊசி போட்டதால், தென்காசியைச் சேர்ந்த நான்கு வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்திருக்கும் செய்தி, மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழக அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் உயிரிழப்புகள் எண்ணிலடங்காமல் அதிகரித்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, போதிய மருத்துவர்கள் இல்லாததால் ஏற்பட்டுள்ளன. நான்கு ஆண்டுகளாக, மருத்துவர்களை நியமிக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறார் சுகாதாரத்துறை அமைச்சர்?

மருத்துவர்கள் நியமனம் எதனால் தாமதமாகிறது? எத்தனை சிறு குழந்தைகளைத் தொடர்ந்து பறி கொடுத்து வருகிறோம்? இதோ, அதோ என்று, நான்கு ஆண்டுகளில் தமிழக மருத்துவத் துறையை நாசமாக்கி விட்டு, கொஞ்சம் கூட மனசாட்சி இன்றிப் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கக் கூச்சமாக இல்லையா அமைச்சருக்கு? இத்தனை கையாலாகாத அமைச்சரை, மிக முக்கியமான சுகாதாரத் துறையில் வைத்திருக்கும் முதல்அமைச்சர் ஸ்டாலினுக்கு, தமிழக அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் தொடர் உயிரிழப்புகள் தெரியுமா தெரியாதா?

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்த சிறுவன் குடும்பத்தினருக்கு, தி.மு.க. கட்சியிலிருந்து உதவி செய்யப் போவதாகக் கூறியிருப்பது, தி.மு.க. அரசின் தோல்வியை மூடி மறைக்கவா? தி.மு.க. கொடுக்கும் பணம், குழந்தையின் உயிருக்கு ஈடாகிவிடுமா? தமிழக அரசு ஏன் பொறுப்பேற்கவில்லை? அரசு சார்பில் ஏன் இழப்பீடு அறிவிக்கவில்லை?

இந்தக் கையாலாகாத தி.மு.க. அரசின் சுகாதாரத்துறை ஒழுங்காகச் செயல்படுவதற்கு இன்னும் எத்தனை உயிர்களைப் பறிகொடுக்க வேண்டும்?

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருநள்ளாறு சனீஸ்வரர் கோவில் பெயரில் போலி இணையதளம்: அர்ச்சகர் கைது


திருநள்ளாறு, பிப்.16

உலக பிரசித்தி பெற்ற திருநள்ளாறு சனீஸ்வரர் கோவிலுக்கு சனிக்கிழமைதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இங்குவெளியூர், வெளிநாட்டு பக்தர்கள் எளிதாக சாமி தரிசனம் செய்யும் வகையில் கோவில் நிர்வாகம் பல ஆண்டுகளுக்கு முன் இணையதளத்தை உருவாக்கி முக்கிய பூஜைகள், தரிசனம் குறித்த விவரங்களை பதிவிட்டு வருகிறது. மேலும் அபிஷேகம், அர்ச்சனை உள்ளிட்டவைகளும் இணையதளத்தில் முன்பதிவு செய்யப்படுகிறது.

அதேபோல் கோவிலுக்கு வர முடியாத பக்தர்களுக்கும் பூஜை செய்யப்பட்டு பிரசாதம் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் பக்தர்கள் சிலர் கோவில் இணையதளத்தில் பணம் செலுத்தி விட்டதாகவும், பிரசாதம் வரவில்லை என்றும் கோவில் நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தனர்.

இதுகுறித்து காரைக்கால் சைபர் கிரைம் போலீசில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோவில் நிர்வாக அலுவலர் அருணகிரிநாதன் புகார் செய்தார். இதையடுத்து போலீசார் ஆய்வு செய்தபோது கோவில் பெயரில் போலி இணையதளம் தொடங்கி பணம் வசூலிப்பது தெரிய வந்தது. அதற்கான ஆதாரங்களையும் கைப்பற்றினர்.

இதுகுறித்து கோவில்



மேலாளர் சீனிவாசன், திருநள்ளாறு போலீசில் புகார் செய்தார். அதில் 'கோவில் அர்ச்சகரான வெங்கடேஸ்வர குருக்கள், பெங்களூருவை சேர்ந்த ஜனனி பரத் என்பவரும் சேர்ந்து கோவில் நிர்வாகம் பெயரில் போலியாக இணையதளத்தை உருவாக்கி உள்ளனர். அவர்கள் பக்தர்களிடம் பணத்தை பெற்று போலியாக பிரசாதம் அனுப்பி வைத்துள்ளனர். இதனால் கோவில் நிர்வாகத்தை ஏமாற்றியும், கோவிலுக்கு இழப்பை ஏற்படுத்தியும் உள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து வெங்கடேஸ்வர அர்ச்சகர் மற்றும் பெங்களூருவை சேர்ந்த ஜனனி பரத் ஆகிய 2 பேரை திருநள்ளாறு போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தில் மேலும் சிலருக்கு தொடர்பு இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக போலீசார் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

# சென்னையில் வேல் யாத்திரை நடத்த சென்னை ஐகோர்ட்டு அனுமதி மறுப்பு



சென்னை, பிப்.16

திருப்பரங்குன்றம் மலையை காக்க வேண்டும்' என்ற கோரிக்கையுடன், வருகிற 18ம் தேதி சென்னை தங்கசாலையில் உள்ள, ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் இருந்து, கந்த கோட்டம் முருகன் கோவில் வரை, வேல் யாத்திரை செல்ல அனுமதி வழங்க போலீசாருக்கு உத்தரவிடக் கோரி, சென்னை ஐகோர்ட்டில் பாரத் இந்து முன்னணி வடசென்னை மாவட்ட துணைத் தலைவர் எஸ்.யுவராஜ் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, 'இந்துக்களுக்கு சொந்தமான திருப்பரங்குன்றம் மலையை காக்க வேண்டும் என்ற உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில், சென்னையில் கந்த கோட்டம் முருகன் கோவிலை நோக்கி, அமைதியான முறையில், வேல் யாத்திரை மேற்கொள்ள அனுமதி கோரியும், போலீசார் அனுமதிக்கவில்லை என்றார்.

அப்போது காவல் துறை தரப்பில், தற்போது வேல் யாத்திரை நடத்த அனுமதி கோரும் மின்ட் பகுதி, போக்குவரத்து நெருக்கடி மிகுந்தது. திருப்பரங்குன்றம் மலையின் உரிமை தொடர்பாக, ஏற்கனவே, 'பிரிவியூ கவுன்சில்' வரை சென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும், மத நல்லிணக்கத்துடன் சமூக ஒருமைப்பாட்டை, ஒற்றுமையை நிலைநாட்டி வருகின்றனர்.

திருப்பரங்குன்றம் மலையை காரணமாக்கி, இந்த ஒற்றுமையை குலைத்து விடக்கூடாது. பொது அமைதி, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை பேணப்பட வேண்டும்,' என வாதிடப்பட்டது. இதையடுத்து, 'திருப்பரங்குன்றம் மலையை காக்க, சென்னையில் பேரணி செல்ல வேண்டிய அவசியம் என்ன?' என, நீதிபதி கேள்வி எழுப்பியிருந்தார். மேலும், தீர்ப்பை நாளைக்கு (அதாவது இன்று) ஒத்திவைத்தார்.

இந்த நிலையில், இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னையில் வேல் யாத்திரை நடத்த சென்னை ஐகோர்ட்டு அனுமதி மறுத்துள்ளது. மேலும் பாரத் இந்து முன்னணி யுவராஜ் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. திருப்பரங்குன்றம் மலை பிரச்சினையை காரணமாக்கி மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கக்கூடாது என காவல்துறை வாதம் முன் வைத்த நிலையில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# செங்கோட்டையன் அதிமுகவுக்கு கடைசி வரை உறுதுணையாக இருப்பார்: கே.பி.முனுசாமி



கிருஷ்ணகிரி, பிப்.16

கிருஷ்ணகிரியில் அதிமுக துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

செங்கோட்டையன் அதிமுகவின் மூத்த தலைவர்களில் ஒருவர். அரசியலில் மிகப்பெரிய அனுபவம் கொண்டவர்; ஏற்றத் தாழ்வுகளை சந்தித்தவர். ஜெயலலிதா அவருக்கு எந்த அளவுக்கு மதிப்பும், மரியாதையும் அளித்தாரோ, அதே அளவுக்கு எடப்பாடி பழனிசாமியும் அவரை மதிப்புடன் நடத்துகிறார்.

எவ்வளவு சோதனைகள் வந்தாலும் செங்கோட்டையன் இந்த இயக்கத்திற்கு கடைசி வரை உறுதுணையாக இருப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. கட்சியை எதிர்த்து தேர்தல் களத்தில் நிற்கிறார் எதிரிகளுடன் சேர்ந்து எங்களை எதிர்க்கிறார் ஓ.பன்னீர்செல்வம். பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி குறித்து பேச எந்தவித தகுதியும் தார்மீக உரிமையும் டிடிவி தினகரனுக்கு இல்லை.

விஜய்யை தன் பக்கம் இழுப்பதற்காக அவருக்கு மத்திய பாஜக அரசு ஒய் பிரிவு பாதுகாப்பு வழங்கியுள்ளது. பாஜகவின் கடந்தகால வரலாற்றை திரும்பிப் பார்த்தாலே எதற்காக பாதுகாப்பு அளித்துள்ளனர் எனப் புரியும். இவ்வாறு அவர் கூறினார்.

# வருவாய்த்துறை பணியாளர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்: ஜி.கே.வாசன்



சென்னை, பிப்.16

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசு வருவாய்த் துறையின் பணிகளை முறைப்படுத்த வேண்டும். குறிப்பாக சிட்டா அடங்கல், பட்டா, பட்டா மாறுதல், கூட்டு பட்டா, பெயர் நீக்கம், பெயர் சேர்த்தல் போன்றவற்றிற்காக மக்கள், கிராம நிர்வாக அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட வருவாய் அலுவலகம் ஆகியவற்றிற்கு செல்ல வேண்டும். அப்படி சென்றால் அங்கு தேவையான எண்ணிக்கையில் பணியாளர்களோ, அதிகாரிகளோ இல்லை என்ற குறை உள்ளது. இந்நிலையில் மக்களின் வீடு, இடம், நிலம் சம்பந்தமான மனுவை விசாரித்து, அதற்கான தீர்வு கிடைக்க வேண்டுமென்றால் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலையே தமிழகத்தில் நிலவுகிறது. இப்படி வருவாய்த்துறையினரின் காலதாமதமான பணியால் வசதி படைத்தவர்களால் பொறுமை காக்க முடியும். ஆனால் ஏழை, எளிய மக்கள் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள்.

பட்டா சம்பந்தமாக 30 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்று வருவாய்த்துறைக்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்து ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் பட்டா சம்பந்தமாக வருடக்கணக்கில் வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு சென்று வந்த, மனதளவில், பொருளாதார அளவில் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களை இன்றைக்கும் நம்மால் பார்க்க முடிகிறது. பட்டா கேட்டு மனு கொடுத்து தீர்வு கிடைக்காமல் காலமானவர்களும் உண்டு. அவர்களின் வாரிசுகளும் பட்டா கேட்டு அலைந்து கொண்டு இருப்பதும் உண்டு. இதற்கெல்லாம் காரணம் வருவாய்த்துறையை முறைப்படி, சரியாக இயக்காத தமிழக அரசுதான்.

இந்நிலையில் வருவாய்த்துறையினர் விதிப்படி வேலை என்ற போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதாவது வருவாய்த்துறை அலுவலகங்களில் உதவியாளர் முதல் வட்டாட்சியர்வரை பணிபுரியும் 14 ஆயிரம் பணியாளர்கள் அலுவலக நேரத்திற்கு முன்பாகவும், பின்பாகவும், விடுமுறை நாட்களிலும் பணியாற்ற போவதில்லை எனத்தெரிவித்துள்ளனர். இதனால் வருவாய்த்துறையை எதிர்நோக்கி காத்திருக்கும் மக்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

எனவே தமிழக அரசு, வருவாய்த்துறையில் பணிபுரியும் பணியாளர்கள் விடுத்துள்ள பணி அழுத்தம் உள்ளிட்ட அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். மேலும் தமிழக அரசு, வருவாய்த்துறை அலுவலகத்திற்கு செல்லும் மக்கள் அளிக்கும் நியாயமான கோரிக்கைகளுக்கும், மனுக்களுக்கும் காலத்தே விசாரணை நடைபெறவும், காலம் தாழ்த்தாமல் உரிய தீர்வு ஏற்படவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அடிப்படை வசதியைக்கூட மக்களுக்கு செய்து கொடுக்க இயலாத திமுக அரசு: ஓ.பன்னீர்செல்வம்



சென்னை, பிப்.16

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவின் உயிர்நாடியாக விளங்குவது கிராமப்புறங்கள்தான் என்பதும், கிராமங்கள் சிறந்து விளங்கினால்தான் நாட்டின் பொருளாதாரம் உயரும் என்பதும், பாரத நாடு வளர்ச்சியுறும் என்பதும் எல்லோரும் அறிந்த ஒன்று. இதன் அடிப்படையில் ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை பெருக்கி, மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளை வழங்கி, அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது மாநில அரசின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். இந்த அடிப்படை வசதியைக் கூட மக்களுக்குச் செய்து கொடுக்க இயலாத திராணியற்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இருக்கின்ற நிலையில், ஒன்பது மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக் காலம் முடிவடைந்துவிட்டது. இந்த ஊராட்சிகளில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுடைய கண்காணிப்பில் ஊராட்சிகளில் உள்ள அத்தியாவசியப் பணிகளான குடிநீர் விநியோகம், தூய்மைப் பணி மேற்கொள்ளுதல், வரி வசூல் செய்தல், தெருவிளக்கு பராமரிப்பு போன்றவற்றை ஊராட்சி செயலாளர்கள் மேற்கொள்வது வழக்கம். ஆனால், ஆயிரக்கணக்கான ஊராட்சிகளில் செயலாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்ற ஓர் அவல நிலை நீடிக்கிறது. ஒரு செயலாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊராட்சிகளை கவனிக்கும் நிலை உள்ளதால், ஊராட்சிகளின் அத்தியாவசியப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை அனைத்துப் பணியாளர் சங்கம் தெரிவிக்கிறது. இதுதவிர, பல ஊராட்சிகளில் தூய்மைப் பணியாளர் இடங்களும் காலியாக உள்ளன. இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் இலட்சணம். திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துத் துறைகளுமே அலங்கோலமாக காட்சி அளிக்கின்றன.

கிராமங்களின் வளர்ச்சியில்தான் ஒரு நாட்டின் வளர்ச்சி அடங்கி இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, ஊராட்சிகள் மேம்பட வேண்டுமென்பதை மனதில் நிலைநிறுத்தி, ஊராட்சிகளில் காலியாக உள்ள ஊராட்சி செயலாளர் மற்றும் தூய்மைப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருச்செந்தூர்: தக்காளி சட்னியில் பல்லி 8 மாணவர்களுக்கு வாந்தி மயக்கம்

தூத்துக்குடி பிப்.16

திருச்செந்தூர் மணப்பாடு மீனவ கிராமத்தில் மாணவர்கள் தங்கும் விடுதி ஒன்று இயங்கி வருகிறது. அங்கு பல மாணவர்கள் தங்கி இருந்து படித்து வருகின்றனர்.

இந்நிலையில் அங்கு கொடுக்கபட்ட தோசை மற்றும் தக்காளி சட்னியை மாணவர்கள் சாப்பிட்டனர். சாப்பிட்ட பின்னர் அங்கிருந்த மாணவர்கள் அனைவருக்கும் வாந்தி மயக்கம் என உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதனால் அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களை சோதனை செய்த போது சாப்பிட்ட உணவால்தான் மாணவர்களுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து மாணவர்கள் சாப்பிட்ட தக்காளி சட்னியில் பல்லி விழுந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதில் பாதிக்கப்பட்ட 8 மாணவர்கள் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விவகாரம் குறித்து குலசேகரபட்டினம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜப்பானில் கடுமையான பனிப்புயல்



டோக்கியோ, பிப்.16

ஜப்பானில் இந்த மாதம் தொடங்கி கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது. அங்குள்ள வடக்கு மாகாணங்களான புகுஷிமா, சிமானே, யமகட்டா, டோயோமே உள்ளிட்டவற்றில் கடுமையான பனிப்புயல் வீசியது. கடுமையான பனிப்புயல் காரணமாக அங்குள்ள சாலைகள், ரெயில் தண்டவாளங்கள் ஆகியவை போர்வை போர்த்தியபோது போல பனி மூடியது.

இதனால் குறிப்பிட்ட நேரங்களில் பஸ்கள், புல்லட் ரெயில் முதலிய பொது போக்குவரத்து சேவை தடை செய்யப்பட்டு மீண்டும் இயக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள பள்ளி, கல்லூரி வளாகங்கள் மூடப்பட்டு ஆன்லைன் மூலமாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்தநிலையில் ஜப்பானில் பனிப்புயலில் சிக்கி ஒரு வாரத்தில் 12 பேர் உயிரிழந்து உள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

# கனிமவளக்கொள்ளை!கண்டுகொள்ளாத வருவாய்த்துறை,

சேலம் மாவட்டம்,மேட்டூர் வட்டம், கண்ணாமூச்சி கிராமம், உப்புக் கல்லூர்(புதிய ) பழங்குடியினர் காலனியின் அருகில் குடியிருக்கும் லட்சுமணன் என்பவர் தனது வீட்டின் அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள பாறைகளை வெட்டி எடுத்து, கூலி ஆட்கள் மூலம் கோயில் கற்கள் செதுக்கி கடந்த ஒரு மாதமாக டிப்பர் லாரிகள் மூலம் கடத்தி வருகிறார். இதுகுறித்து வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு தெரிந்தும் கண்டுகொள்ளாமல் விட்டுள்ளனர். இன்று 5,6 டிப்பர் லாரிகள் கற்கள் கடத்திக்கொண்டு சென்று வருவதை பார்த்து," சமூக ஆர்வலர்"சி. சி. சண்முக சந்திர வேலவன், மாவட்ட துணைச் செயலாளர்,REDEYE HR FOUNDATION, முதலமைச்சர் உதவி மைய எண் 1100ல் தொடர்பு கொண்டு புகார்அளித்துள்ளார். சேலம் மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் கனிம வளக் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும் மற்றும் துணையாக செயல்படும் வருவாய்த்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கூறுகின்றனர்.



தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் குற்ற வழக்கில் தொடர்புடைய நபர்களை விரைந்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திய காவல்துறையினர் மற்றும் தனிப்படையினர், நீதிமன்ற விசாரணையில் வழக்கின் சாட்சிகளை உரிய நேரத்தில் ஆஜர்படுத்தி வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை விரைந்து கிடைக்கும் வகையில் சிறப்பாக பணிபுரிந்த நீதிமன்ற காவலர்களுக்கும் மற்றும் பல்வேறு பணிகளில் சிறந்து விளங்கிய காவல்துறையினரின் சீர்மிகு பணியை பாராட்டி தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.R.சிவபிரசாத்,இ.கா.ப., அவர்கள் நற்சான்றிதழ்கள் வழங்கி, மேலும் சிறப்பாக பணிபுரிய தனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்



தென்காசி மாவட்டம் இலத்தூர் காவல்நிலைய குற்ற எண் 42/25 மற்றும் கடையநல்லூர் காவல்நிலைய குற்ற எண் 105/25 வழக்கில் குற்றவாளிகளை துரிதமாக செயல்பட்டு கண்டறிந்து கைது செய்து நீதி மன்ற காவலுக்கு அனுப்பி சிறப்பாக பணிபுரிந்த கடையநல்லூர் காவல் ஆய்வாளர் திரு. ஆடிவேல் அவர்களை பாராட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அரவிந்த் அவர்கள் சான்றிதழ் வழங்கினார்

# கேங்கர்ஸ் படம் : லேடி கெட்டப்பில் நடிக்கும் வடிவேலு!



சுந்தர்.சி இயக்கத்தில் காமெடியனாக நடிகர் வடிவேலு நடித்த படங்கள் அனைத்தும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றவை. சுந்தர்.சி வடிவேலு இதுவரை மூன்று படங்களில் இணைந்து பணியாற்றியுள்ளனர். வின்னர் படத்தின் கைப்புள்ள, தலைநகரம் படத்தின் நாய் சேகர், நகரம்மறுபக்கம் படத்தின்ஸ்டைல்பாண்டிகதாபாத்திரங்கள் என்றென்றும் ரசிக்க கூடியவை.

இதற்கிடையில் 15 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் இந்த கூட்டணி இணைந்துள்ளது. அதாவது, வடிவேலுவின்பிறந்தநாளைமுன்னிட்டுசுந்தர்.சிஇயக்கத்தில் வடிவேலு நடிக்கும் 'கேங்கர்ஸ்' படத்தின் அறிவிப்பு வெளியானது. அதில் வடிவேலு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். வடிவேலு மற்றும் சுந்தர். சியுடன் இணைந்து கேத்ரின் தெரசா, வாணி போஜன் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இந்த நிலையில், காமெடி கதைக்களத்தில் உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்புகள் நிறைவடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதில் நடிகர் வடிவேலு 5 கதாபாத்திரங்களில் நடித்துள்ளதாகவும், அதிலும் முக்கியமாக லேடி கெட்டப்பிலும் நடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. வடிவேலு ஏற்கனவே "பாட்டாளி, நகரம், தலைநகரம்" ஆகிய படங்களில் லேடி கெட்டப்பில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகமாகி உள்ளது.

# வாயை திறந்தால் என்ன நடக்கும் என தெரியும் யூடியூபர் சர்ச்சை குறித்து ஏ.ஆர்.ரகுமான்



மராத்திய பேரரசர் சத்ரபதி சிவாஜியின் மூத்த மகன் சத்ரபதி சம்பாஜி மகாராஜாவின் வாழ்க்கை வரலாற்றை மையமாக கொண்டு 'சாவா' உருவாகியுள்ளது. லக்ஷ்மன் உடேகர் இயக்கியுள்ள இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தில் நடிகர் விக்கி கவுசல், நடிகை ராஷ்மிகா, நடிகர் அக்சய் கண்ணா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படம் காதலர் தினத்தை முன்னிட்டு நேற்று திரையரங்குகளில் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

முன்னதாக 'சாவா' படத்தின் இசை வெளியீட்டு விழா மும்பையில் நடைபெற்றபோது, இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானிடம் அவரது இசையை 3 எமோஜிக்களை கொண்டு விவரிக்குமாறு நடிகர் விக்கி கவுசல் கேட்டார். அதற்கு ஏ.ஆர். ரகுமான் வாயை மூடிக்கொள்வது போன்று சைகை செய்தார்.

பின்னர், 'வாயை திறந்தால் என்ன நடக்கும் என தெரியும். கடந்த ஒரு வாரமாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்' என்றார். இதனைக் கேட்டு அங்கு பெரும் சிரிப்பலை எழுந்தது. சமீபத்தில் யூடியூபர் ரன்வீர் அல்லாபாடியா என்பவர், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சர்ச்சை கருத்துக்கு பலர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

அவர் மீது அசாம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மேலும் அந்த நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தேசிய மகளிர் ஆணையம் சம்மன் அனுப்பியது. இதனிடையே தனது பேச்சுக்கு யூடியூபர் ரன்வீர் மன்னிப்பு கோரினார். இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து ஏ.ஆர்.ரகுமான் மறைமுகமாக கருத்து தெரிவித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# சாம்பியன்ஸ் டிராபி: வருண் சக்ரவர்த்திக்காக அவரை கழற்றி விட்டு விடாதீர்கள் இந்திய முன்னாள் வீரர்



நடப்பு சாம்பியன் பாகிஸ்தான், இந்தியா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய 8 அணிகள் பங்கேற்கும் 9வது சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் துபாயில் வருகிற 19ந் தேதி முதல் மார்ச் 9ந் தேதி வரை நடக்கிறது. பாதுகாப்பு கருதி இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் துபாயில் அரங்கேறுகிறது. கராச்சியில் நடைபெறும் தொடக்க லீக் ஆட்டத்தில் (19ந் தேதி) பாகிஸ்தான்நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இதில் ரோகித் சர்மா தலைமையிலான அறிவிக்கப்பட்ட இந்திய அணியில்கடைசி நேரத்தில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டன. வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா காயம் காரணமாக இந்த தொடரில் இருந்து விலகிய நிலையில் அவருக்கு பதிலாக ஹர்ஷித் ராணா சேர்க்கப்பட்டார். இதேபோல் தொடக்க ஆட்டக்காரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் நீக்கப்பட்டு சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்ரவர்த்தி அவரது இடத்தை பிடித்துள்ளார். இது பலரது மத்தியில் கேள்வியை எழுப்பியது.

ஏற்கனவே ஜடேஜா, அக்சர், குல்தீப் யாதவ் மற்றும் வாஷிங்டன் சுந்தர் என 4 ஸ்பின்னர்கள் இடம் பெற்றிருந்த நிலையில், 5வதாக வருண் சக்ரவர்த்தியும் சேர்க்கப்பட்டது பலரது மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்திய அணியில் 5 ஸ்பின்னர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது சரியான முடிவாக இல்லை என்று முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா தெரிவித்துள்ளார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வருண் சக்கரவர்த்திக்காக பிளேயிங் லெவனில் குல்தீப் யாதவை கழற்றி விட்டு விடாதீர்கள் என்றும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.

அதற்கானகாரணம் குறித்து அவர்பேசியது பின்வருமாறு: "சாம்பியன்ஸ் டிராபி தொடருக்காக இந்தியா 5 ஸ்பின்னர்களை தேர்ந்தெடுத்துள்ளது. துபாயில் சுழலை வைத்து வெல்ல முடியுமா? என்பது எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஏனெனில் அங்குள்ள மைதானம் ஸ்பின்னர்களுக்கு எப்போதும் பெரிய உதவிகள் செய்ததில்லை. அது போன்ற சூழ்நிலையில் வருண் சக்கரவர்த்திக்காக குல்தீப் யாதவ் பெஞ்சில் அமர வைக்கப்பட மாட்டார் என்று நான் உண்மையாக நம்புகிறேன். தேவைப்பட்டால் இருவரையும் விளையாட வையுங்கள். ஆனால் குல்தீப் இந்திய அணியின் முதன்மை ஸ்பின்னராக இருக்க வேண்டும்" என்று கூறினார்.

# ஓட்டுனர் உரிமம் இல்லாமல் குப்பை வாகனம் இயக்க கூடாது: மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்

சென்னை, பிப்.16

சென்னையில் குப்பை வாகனம் மோதி காயமடைந்த சிறுமியின் தந்தை தொடர்ந்த வழக்கில், காயமடைந்த சிறுமிக்கு ரூ.1.78 லட்சம் இழப்பீடு வழங்க சென்னை மாநகராட்சிக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.



இந்த விபத்துக்கு மாநகராட்சிநிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும் என்றும், ஓட்டுனர் உரிமம் இல்லாமல் குப்பை வாகனம் இயக்க கூடாது என்று தெரிவித்துள்ளதீர்ப்பாயம், ஓட்டுனர் உரிமம் இல்லாதவர்கள் 3 சக்கர பேட்டரி குப்பை வாகனத்தை இயக்குவது சட்டவிரோதம் என்று தெரிவித்துள்ளது.

# 108 ஆம்புலன்சில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் பேராசிரியர் உயிரிழப்பா?தமிழக அரசு விளக்கம்

சென்னை, பிப்.16

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம் அருகே உள்ள படூரில் இயங்கி வரும் தனியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் ஆம்புலன்சில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் உயிரிழப்பு. மாணவர்கள் போராட்டம் என வெளியான செய்தியை மேற்கோள் காட்டி, 108 ஆம்புலன்சில் ஆக்சிஜன் பற்றாக்குறை என சமூக வலைத்தளங்களில் தகவல் பரவி வருகிறது. இதற்கு தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.





இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "இது தவறான செய்தி. இந்த சம்பவம் நடந்த பல்கலைக்கழகத்துக்கு அருகே அமைந்துள்ள கேளம்பாக்கம், நாவலூர், கண்டிகை, திருவிடந்தை, திருப்போரூர் ஆகிய பகுதிகளில் உள்ள 108 ஆம்புலன்ஸ் சேவைக்கு, அங்கிருந்து அழைப்பு ஏதும் வரவில்லை, அங்கு ஆம்புலன்ஸ் செல்லவும் இல்லை.


வேறு தனியார் ஆம்புலன்ஸ் வாகனமே சென்றுள்ளது. 108 ஆம்புலன்ஸ்களில் உயிர் காக்கும் உபகரணங்கள் முழுமையாக பொருத்தப்பட்டுள்ளன என்று தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் (108 ஆம்புலன்ஸ்) திட்ட இயக்குனர் விளக்கம் அளித்துள்ளார்" என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# குண்டு வெடிப்பு தினம்: கோவையில் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு

கோவை, பிப்.16

கோவையில் கடந்த 1998ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ந் தேதி தொடர் குண்டுகள் வெடித்தன. இதில் 58 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர். இந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14ந் தேதி இந்து அமைப்புகள்சார்பில் ஆர்.எஸ்.புரத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. அதன்படி பேரணி மற்றும் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதையொட்டி கோவை மாநகரபோலீஸ்கமிஷனர் சரவண சுந்தர் தலைமையில் துணை கமிஷனர்கள், உதவி கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், போலீசார் என்று 2 ஆயிரம் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. இதனால் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.





அத்துடன் இன்று காதலர் தினம் என்பதால் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்கள், பஸ் நிலையங்கள்,பூங்காக்கள், கோவையில் உள்ள குளக்கரைகள் ஆகியவற்றிலும் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நேருக்கு நேர் வேன்-பஸ் மோதி விபத்து: 3 பேர் பலி

தேனி, பிப்.16

கிருஷ்ணகிரியில் இருந்து பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று சபரி மலைக்கு சென்று கொண்டிருந்தது. . இதனிடையே சபரிமலையில் இருந்து பகதர்களை ஏற்றிக்கொண்டு ஒசூருக்கு திரும்பிய வேன் ஒன்று தேனி அருகே சென்று கொண்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இரவு எதிர்பாராத விதமாக வேன்மற்றும்பஸ்நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் வாகனத்தின் முன்பக்க கண்ணாடிகள் சுக்குநூறாக நொறுங்கியது. இதில் இரண்டு வாகனத்திலும் பயணித்தபக்தர்கள்பலத்த காயத்துடன் விழுந்துகிடந்தனர்.

இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 10 வயது சிறுவன் உள்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து உயிரிழந்தனர். மேலும் படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் சிலர் படுகாயங்களுடன் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இது குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற பெண் சாவு

திருவண்ணாமலை, பிப்.16

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் காந்திநகர் பகுதியை சேர்ந்தவர் பழனி மகள் உஷா ராணி (வயது 58). இவர் கடந்த 11ந் தேதி அவரது உறவினர்களுடன் பவுர்ணமி கிரிவலம் செல்வதற்காக திருவண்ணாமலைக்கு வந்தார். கிரிவல பக்தர்கள் கூட்டத்தில் உஷா ராணி அவரது உறவினர்களிடம் இருந்து தவறி சென்றார். வழக்கமாக அவர் கிரிவலம் வந்து செல்வதால் எந்தவித பதற்றமும் இன்றி அவரது உறவினர்கள் வீடு திரும்பினர்.

இதற்கிடையில் கிரிவலம் சென்ற உஷாராணி திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் காஞ்சி சாலையில் உள்ள சிட்கோ பஸ் டிப்போ அருகில் மயங்கி விழுந்து கிடந்தார். பின்னர் அவரை அக்கம்பக்கத்தினர் திருவண்ணாமலை தாலுகா போலீசார் உதவியுடன் மீட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சு மூலம் சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு உஷா ராணி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து தாலுகா போலீசார் விசாரணை நடத்தி அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தனர். பின்னர் அவரது சகோதரர் வெங்கடேசன் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கிரிவலம் சென்ற பெண் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மாஞ்சோலையில் அரசு பஸ்சின் முன்பாக ஒய்யாரமாக நடந்து சென்ற ஒற்றை யானை

நெல்லை, பிப்.16

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு மேற்கு தொடர்ச்சி மலையில் மாஞ்சோலை, காக்காச்சி, நாலுமுக்கு, ஊத்து பகுதிகளில் தேயிலை தோட்டங்கள் உள்ளன. அங்கு பணியாற்றிய தொழிலாளர்களுக்கு தேயிலை தோட்ட நிறுவனம் விருப்ப ஓய்வு அளித்ததால் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் இழந்து தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு கல்லிடைக்குறிச்சியில் இருந்து மணிமுத்தாறு, மாஞ்சோலை வழியாக ஊத்து பகுதிக்கு அரசு பஸ் புறப்பட்டு சென்றது. தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் பஸ்சில் பயணித்தனர். மாஞ்சோலை பகுதியில் பஸ் சென்றபோது, சாலையின் நடுவில் ஒற்றை யானை நின்று கொண்டிருந்தது.

இதனால் பயணிகள் அச்சம் அடைந்தனர். எனினும் அந்த யானை பஸ்சை நோக்கி வராமல், பஸ்சின் முன்புறமாக சாலையில் மெதுவாக நடந்து சென்றது. சுமார் 100 மீட்டர் தூரத்துக்கு ஒய்யாரமாக நடந்து சென்ற யானை அடர்ந்த வனப்பகுதிக்குள் புகுந்து மறைந்தது. இதனால் பயணிகள் நிம்மதியடைந்தனர். சாலையின் நடுவில் நின்ற யானை, பஸ்சின் முன்பாக நடந்து சென்றதை பயணிகள் செல்போனில் வீடியோ எடுத்தனர். இந்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066